| (அ) பதனிடலும் விநியோகமும் ... | 1,305 | 1,340 | 1,782 | 1,924 | 1,929 |
| (ஆ) கட்டிப்பாற் தொழிற்சாலை | 226 | 226 | வி. கி. | வி. கி. | வி. கி. |
| (இ) பால் மாத் தொழிற்சாலை ... | 161 | 194 | 172 | 237 | 237* |
| 2. கீழைத்தாள் ஆலை .. | 1,240 | 1,380 | 1,881 | 2,220 | 2,685 |
| 3. இலங்கை மட்பாண்ட ... | 998 | 1,130 | 1,060 | 1,256 | 1,436* |
| 4. இலங்கை கொழுப்பு எண்ணெய் ... | 770 | 810 | 889 | 938 | 924 |
| 5. இலங்கை ஒட்டுப் பலகை ... | 1,199 | 1,226 | 1,647 | 2,455 | 2,455* |
| 6. இலங்கை தோல் உற்பத்திகள் ... | 690 | 864 | 908 | 1,045 | 993 |
| 7. பரந்தன் இரசாயன ... | 317 | 321 | 315 | 350 | 374* |
| 8. இலங்கை சீமெந்து ... | 2,379 | 2,332 | 2,573 | 2,700 | 2,739 |
| 9. இலங்கை சீனி ... | 2,234 | வி. கி. | வி. கி. | வி. கி. | 6,114 |
| 10. இலங்கை கனிப்பொருள் .. | 407 | 426 | 475 | 486 | 503 |
| 11. தேசிய உப்பு . | 1,492 | 1,589 | 2,013 | 1,151 | 1,007 |
| 12. தேசிய புடவை ... | 2,170 | 2,700 | 4,124 | 6,040 | 7,087 |
| 13. இலங்கை உருக்கு ... | 960 | 927 | 943 | 1,143 | 1,167 |
| 14. இலங்கை ரயர் ... | 1,302 | 1,423 | 1,657 | 1,798 | 2,006 |
| 15. தேசிய சிறு கைத்தொழில் ... | 2,060 | 1,939 | 1,935 | 1,950 | — |
| 16. இலங்கை வன்பொருட் ... | 1,085 | 1,124 | 1,400 | 1,425 | 1,398 |
| 17. அரசாங்க மாவரைத்தற் ... | 425 | 481 | 551 | 550 | 523 |
| 18. இலங்கை மீன்பிடி ... | 3,417 | 2,861 | 1,807 | 1,256 | 1,307 |
| 19. அரசாங்க உரத் தயாரிப்பு ... | 60 | 93 | 105 | 99 | 99 |
| 20. இலங்கை பெற்ரோலிய–எண்ணெய் | 477 | 381 | 418 | 496 | 512 |
| தூய்மைப்படுத்தும் கலவைப் பொறி ... | 66 | 66 | 115 | 129 | 90 |
| 21. இலங்கை ஆயுள்வேத மருந்துகள் ... | 147 | 142 | 201 | 329 | 233 |
| 22. இலங்கை மரப் பொருள் ... | 1,517 | 1,606 | 2,394 | 2,360 | 2,360* |
| 23. அரசாங்க அச்சுக் .. | 92 | 107 | வி. கி. | 353 | 353* |
| 24. சந்தைப்படுத்தும் திணைக்களம்–பழம் கலனிடல் தொழிற்சாலை | 170 | வி. கி. | வி. கி. | 229 | 229* |
| 25. அரசாங்க சாராய வடிப்பு, சீதுவை | 83 | 83 | வி. கி. | வி. கி. | 114 |
| 26. அரசாங்க காரீயக் ... | — | — | — | 1,609 | 1,544 |
| 27. இலங்கை புகையிலைக் கைத்தொழில் | — | — | — | 112 | 179 |
| **மொத்தம்** | **27,449** | **25,771** | **29,365** | **34,640** | **40,597** |

மூலம்: எண் தொகைகள் அவ்வக் கூட்டுத்தாபனங்களாற் தரப்பட்டவை.

1. எண்தொகைகள் கணக்காண்டுகளுக்குரியவை. அதாவது கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் எப்பிறல்–மாச்சு; தேசிய பாற்சபையினதும், பெற்ரோலியக் கூட்டுத்தாபத்தினதும் சனவரி–திசெம்பர்; பழம் கலனிடல் தொழிற்சாலையினதும், அரசாங்க சாராய வடிப்பு வடிசாலையினதும் ஒற்ரோபர்–செத்தெம்பர். 1971ம், 1972ம் 1973ம் ஆண்டுகளுக்கான எண்தொகைகள் கலண்டர் ஆண்டுக்குரியவை.

* எண்தொகைகள் 1972, திசெம்பர் மாத இறுதியின்படி.

## அட்டவணை II (ஈ) 8

## அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் ஏற்றுமதிகள்

ஆயிரம் ரூபாய்களில்

| கூட்டுத்தாபனம் | | 1971 அளவு | 1971 செலாவணி உழைப்பு ரூ.'000 | 1972 அளவு | 1972 செலாவணி உழைப்பு ரூ.'000 | 1973 அளவு | 1973 செலாவணி உழைப்பு ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 **இலங்கை மட்பாண்டம்** | | | | | | | |
| மட்பாண்டத் தொகுதி 4 அங்குல தட்டுக்கள் | டசின்கள் .. | | | | | | |
| கயோலின் | தொன்கள் ... | | | | | | 937.0 |
| 2. **இலங்கை கனிப் பொருட்கள்** | | | | | | | |
| இல்மினேட் | தொன்கள் .. | 85,300 | 3,751.4 | 86,430 | 4,217.0 | 85,211 | 4,888.0 |
| றுடைல் | ,, ... | 1,010 | 802.2 | 3,225 | 2,579.0 | 2,800 | 2,190.0 |
| சிருகோன் | ,, .. | — | — | 10 | 3.0 | 101 | 24.0 |
| 3. **இலங்கை ஒட்டுப்பலகை** | | | | | | | |
| ஒட்டுப்பலகை | ச. அடி ... | — | — | — | — | — | — |
| 4. **இலங்கை மா அரைத்தல்** | | | | | | | |
| தவிடும் குறுந்தவிடும் | தொன்கள் ... | 15,771 | 4,465.0 | 16,940 | 4,161.0 | 11,871 | 3,195.0 |
| 5. **இலங்கை எண்ணெயும் கொழுப்பும்** | | | | | | | |
| கொழுப்புத் திரவகம் | தொன்கள் .. | 1,903 | 4,236.0 | 1,482 | 4,000.0 | 1,749 | 4,380.0 |
| கிளிசறின் | ,, .. | 250 | 486.0 | 231 | 514.0 | 196 | 488.0 |
| 6. **பெற்றோலியம்** | | | | | | | |
| நாப்தா | மெற்றிக் தொன்கள் .. | — | — | — | 12,392.0 | 128,716 | 19,459.0 |
| உலை எண்ணெய் | ,, ,, | 548,673 | 57,914.0 | 410,248 | 6,423.0 | 54,950 | 4,142.0 |
| கப்பல் எண்ணெயும், ஏனையவையும் | ,, ,, .. | 114,062 | 24,438.9 | 114,117 | 69,829.0 | 586,715 | 110,810.0 |
| 7. **அரசாங்க வன்கல** | | | | | | | |
| வெட்டுக் கத்திகள் | எண்ணிக்கை .. | — | — | — | — | — | — |
| வன்கல விடயங்கள் | அலகுகள் | 7,200 | 15.5 | 12,300 | 11.0 | — | 245.0 |
| 8. **பென்சிற்கரி** | | | | | | | |
| காரீயம் | தொன்கள் ... | — | — | — | 9,753.0 | 7,462 | 11,836.0 |
| 9. **தோற் பொருட்கள்** | | | | | | | |
| குரோம் தோல் | க. அடி ... | 8,000 | 21.0 | 108,500 | 165.0 | 610,170 | 1,584.0 |
| பாக் தோல் | இருத்தல்கள் .. | 22,249 | 56.0 | 129,756 | 94.0 | 130,345 | 122.0 |
| சப்பாத்துகள் | ,, ... | — | — | — | — | 1,522 | 11.0 |
| ஏனையவை | ,, | — | — | — | — | — | 274.0 |
| 10. **சீமெந்து** | | | | | | | |
| காங்கேசன்துறை சீமேந்து | தொன்கள் .. | — | — | 50 | 4.5 | — | — |
| 11. **இலங்கை மீன்பிடி** | | | | | | | |
| பிடித்த மீன் | இருத்தல் . | | | | | | |
| சுறு துடுப்பு | இருத்தல் ... | | | | | | |
| 12. **இலங்கை உருக்கு** | | | | | | | |
| உருட்டிய உற்பத்திகள் | மெற்றிக் தொன்கள் ... | — | — | — | — | 1,050 | 1,819.0 |
| கம்பி உற்பத்திகள் | ,, ,, ... | — | — | — | — | 200 | 313.0 |
| 13. **இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம்** .. | ... ... | — | — | — | — | — | 411.0 |
| **மொத்தம்** | ... | | **96,186.0** | | **114,145.5** | | **167,128.0** |

மூலம்: கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சும், தொடர்பான கூட்டுத்தாபனங்களும்.

3. அரசாங்கத்துறையின் கைத்தொழில்கள்

(அ) உணவு, குடிவகை, புகையிலை

(அ) பாற் சபை

1973இல் பட்டர் தவிர்ந்த ஏனைய எல்லா உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தியிலும், விற்பனையிலும் பொதுவான வீழ்ச்சி ஏற்பட்டது. இந்நிலை முக்கியமாக ஆண்டின் நடுப்பகுதியில், எல்லாப் பாற் பொருட்களினதும் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட கேள்விக்குறைவினால் ஏற்பட்டதாகும். மேலதிக பாற் கொள்வனவுகள் கட்டிப்பாற் தொழிற்சாலைக்கும், பால் மாத் தொழிற்சாலைக்கும் மாற்றப்பட்டன. முழுமையாக நோக்கின் சபையின் மொத்த விற்பனவு, முக்கியமாக விலை அதிகரிப்பினால் சிறிதளவாக 17 சத வீதத்தால் அதிகரித்தது.

1973இல் விலை மீளாய்வு செய்யப்படும் வரையும் பாற்சபையின் விலைகள், 1968 இலிருந்து மாற்றமுறாது நிலையாயிருந்தன. உற்பத்திச் செலவு அதிகரித்த நிலையிலும் 1967 வரையும் பாலின் விலையும் நிலையாகவே இருந்தது. நாட்டிற் பால் உற்பத்தியினை ஊக்கம் குன்றச் செய்த ஒரே முக்கிய காரணியாக இதுவே விளங்கியது. 1972இன் இறுதிப்பகுதியில் சபையினது கொள்வனவுகள் குறைந் ததிலிருந்து இது விளங்குகிறது. 1973 வரை சபையின் கொள்கை நுகர்வோர் விலைகளைக் குறைவாக வைத்திருப்பதாகவே இருந்தது. இந்நிலை 1973இல் ஒரு பைந்தின் கொள்விலை 60 சதமாக உயர்த்தப்பட்டதுடன் ஓரளவு நிவிர்த்தி செய்யப்பட்டது.

1973இல் பாற்சபை ரூ. 350 இலட்சம் நட்டத்தையடைந்தது. நட்டத் திலேற்பட்ட இக்கணிசமானளவு அதிகரிப்புக்கு, பாலுக்குச் செலுத்தப்பட்ட உயர்ந்த விலைகளும், வெ. செ. உ. சா. விற்கு உட்பட்ட பால் இறக்குமதிகள் இதனுள் சேர்க்கப்பட்டமையும், தயாரிப்பிற் பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளிடுகைகளின் விலைகள் அதிகரித்தமையுமே காரணமாகும்.

(ஆ) எண்ணெய் கொழுப்புக், கூட்டுத்தாபனம் :

கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் தவிர்ந்த வெளியீடு 1973இல் வீழ்ச்சி யடைந்தது. கால்நடை உணவின் வெளியீடு 52,000 தொன்களாக இருந்தது. நிறுவப்பட்ட இயலளவில் 57 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டமையை இது பிரதிபலிக்கின்றது. இயலளவுப் பயன்பாடு குறைந்தமைக்கு உலகசந்தை யின் உயர்ந்த விலைகள் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட் களின் கொள்வனவு குறைக்கப்பட்டமையே காரணமாகும். 1973இன் குறை வான உற்பத்தி, நாட்டில் கோழித்தீனில் கடுமையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

எனினும், விற்பனவிலிருந்து பெற்ற வரவுகள் 1973, பெப்புருவரியில் விலை களின் உயர்ச்சி காரணமாக ரூ. 70 இலட்சத்தினால் அதிகரித்தன. இவ்விலையதி

கரிப்பு, இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மீது வெ. செ. உ. சா. விதிக்கப்பட்டமையிலும், தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட எல்லா மூலப் பொருட்களின் விலையிலுமேற்பட்ட பொதுவான அதிகரிப்பினுலும் தூண்டப் பட்டது. விலை அதிகரிப்பின் பின்னும், கூட்டுத்தாபனம் நட்டத்தையடைந்தது. ஏனெனில், விலைகளில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு செலவுகளின் அதிகரிப்பை எதிரீடு செய்வதற்குப் பற்ருதிருந்தது.

(இ) சீனிக் கூட்டுத்தாபனம்

1973இற்கான தரவுகள் இக்கூட்டுத்தாபனத்தினுல் கிடைக்கத்தக்கன வாயில்லை. மூன்ருவது வருடமாக் கூட்டுத்தாபனம் இம்முறையும் ஆய்வுக்குரிய ஆண்டில் அதன் தொழிற்பாடுகள் பற்றி எவ்வித தகவலையும் தரமுடியாதுளது. சீனியின் விலையில் ஏற்பட்டுள்ள உலகின் முன்னெப்போதுமில்லாத அதிகரிப் புக்காரணமாக, இலங்கையின் சீனி உற்பத்தியின் முழுமையான பொருளியல் நிலையை நுணுக்கமாக அறிவதற்கு இக்கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடு கள் பற்றிய ஒருநுணுக்கமான ஆய்வு தேவைப்படுகிறது.

(ஈ) அரசாங்க மாவரைத்தற் கூட்டுத்தாபனம் :

ஆய்வுக்குரிய ஆண்டில், மாவின் வெளியீடு 1972இன் 10,000 தொன்க கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 5,000 தொன்களால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி, இறக்குமதி செய்யப்பட்ட தானியத்தின் நிரம்பல் தட்டுப்பாட்டினுலும், இயந்திரங்கள் பழுதடைந்தமையினுலும் ஏற் பட்டதாகும். இத்துடன் தொடர்பான வீழ்ச்சி பக்க - உற்பத்திகளான தவிடு, குறுந்தவிடு என்பவற்றிலும் ஏற்பட்டது. எனினும், பங்கீட்டு முறை யிலான அரிசி, மா என்பன குறைக்கப்பட்டபின்பு, அதன் உற்பத்திப் பொருட் களுக்கான உள்நாட்டுக் கேள்வியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, கூட்டுத் தானம் அதன் பக்க-உற்பத்திகளில் ஒன்ருன ஆட்டா மாவின் உற்பத்தியை அதிகரித்தது. 1973இல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் மாவரைக்கும் இயந்திரங்களின் இயலளவுப்பயன்பாடு மிகக்கூடியதாக 95.5 சதவீதமாக இருந்தது. இவ்வகையில், 95 சதவீதத்திற்குக் கூடுதலான இயலளவைக் கொண் டிருந்த ஒருசில கூட்டுத்தாபனங்களில் மாவரைத்தற் கூட்டுத்தாபனமும் ஒன்ருகும்.

விலைகளில் பொதுவான அதிகரிப்பு ஏற்பட்டபோதும் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் 1973இல் ரூ. 6 இலட்சத்தால வீழ்ச்சியடைந்து ரூ. 30 இலட்சமாக விளங்கியது. இது பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைத் தானியத்தின் விலை அதிகரிப்பினுல் ஏற்பட்டதாகும். 1972ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தவிடு, குறுந்தவிடு என்பவற்றிலிருந்து பெற்ற வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களும் ரூ. 25 இலட்சத்தால், வீழ்ச்சியடைந்து ரூ. 32 இலட்சமாக விளங்கின. மிக உயர்ந்த அளவான இயலளவுப் பயன்பாட்டின் போதும், முடக்கப்பட்ட மூலதனத்தில் இருந்து கிடைத்த வரவுகள் 3.7 சத வீதமாகமட்டுமே இருந்தன. இக்குறைந்தளவான வீதத்திற்கு, கூட்டுத்தாபனம் கோதுமைத் தானியத்திற்கு மிக உயர்ந்த தொகையைச் செலுத்தியபோதும், முடிவுப் பொருட்களைக் குறைந்த விலையிலேயே வைத்திருந்தமையே காரணமா

கும். திரட்டிய நிதிக்கான அதன் உதவுதொகை 1973இல் ரூ. 50 இலட்சமாக விருந்தது.

(உ) தேசிய உப்புக்கூட்டுத்தாபனம் :

1973இல் உப்பின் உற்பத்தி 34,000 தொன்கள் அல்லது 21.93 சதவீதத் தால் வீழ்ச்சியடைந்து 121,000 தொன்கள் அல்லது 22 சத வீதமாக விளங்கி யது. எனினும், இவ்வுற்த்தி. ஆண்டுக்குரிய 90,000 தொன் அளவான உள் நாட்டுக் கேள்வியை விஞ்சியது. இதனல் வருடமுடிவில் கூட்டுத்தாபனம் கணிசமான அளவு உப்பைக் கையிருப்பாக வைத்திருந்தது. விற்பனவிலிருந்து பெற்ற வரவுகள் 1972இன் ரூ. 89.6 இலட்சத்திலிருந்து 1973இல் 133 இலட் சமாக அல்லது 48 சதவீதத்தால் அதிகரித்தன. இது பெரும்பாலும் 1973 மே மாதத்திலிருந்து ஒரு தொன் உப்பின் விலை ரூ. 100 இலிருந்து ரூ. 167 ஆக அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும்.

மிக உயர்ந்த விற்பனவினல். கூட்டுத்தாபனம் (வரிக்குமுன்) சென்ருண்டின் ரூ. 13 இலட்சம் கொண்ட இலாபத்திற்கு எதிராக ரூ. 21 இலட்சம் இலாப மீட்டியது. உற்பத்தியில் முடக்கப்பட்ட மூலதனத்திலிருந்து பெற்ற வருவாய் 1972இன் 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.4 சதவீதமாக அமைந்தது. இவ் எண்தொகை ஒரு கைத்தொழிலுக்கு மிகக்குறைந்த அளவானதும், குறைந்தளவு மூலதனப் பயன்பாடு உடையதுமாகும். எனவே உற்பத்திச் செலவு செம்மைப்படுத்தப்படுவதற்கு இடமுண்டு.

(ஆ) புடவைகள்-ஆடைகள், தோற்கைத்தொழில்கள்

(அ) தேசிய புடவைக் கூட்டுத்தாபனம்.

1972ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1973இல் துல்கிரியாத் தொழிற் சாலையின் உற்பத்தி அதிகரித்தது. ஆகக்கூடிய அதிகரிப்பு நூல் உற்பத்தியில் 73 இலட்சம் யார்களாக ஏற்பட்டது. ஏனைய உற்பத்திகளில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டது. இவ்வாண்டில் தொழிற்சாலை ரூ. 394 இலட்சம் பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பாவித்தது. பருத்தி நூலுக்கு விதிக்கப்பட்ட வெ. செ. உ. சா. வின் விளைவாக இத்தொழிற் சாலையின் உற்பத்திப் பொருட்களின் விலைகள் மீளாய்வு செய்யப்பட்டன. 1973இல் இத்தொழிற்சாலையின் தொழில் வாய்ப்பு 3,732 ஆகவும் கூலிச்செலவு ரூ. 30 இலட்சமாகவும் இருந்தது. 1973ஆம் ஆண்டுக்கான நட்டம் ரூ. 35 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வியாங்கொடையில் உள்ள தொழிற்சாலையும் உற்பத்தியில் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. உயர்ந்தளவு விற்பனவு வருவாய் ஓரளவுக்கு விலைகளின் மீளாய் வினல் ஏற்பட்டதாகும். இவ் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட இலாபம், சென் ருண்டின் ரூ. 26 இலட்சம் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 101 இலட்சமாக அமைந்தது. வியாங்கொடை ஆலையின் மொத்தத் தொழில் வாய்ப்பு 2,880 ஆகவிருந்தது.

பூகொடையிலுள்ள புடவைத் தொழிற்சாலை 1973இல் உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாண்டில் அது, 9,000 இருத்தல் நூலையும், 51,000 இருத்தல் காரிக்கன் துணியையும் உற்பத்தி செய்தது. இவ்வாண்டின் நிதி பற்றிய முடிவுகள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. இத்தொழிற்சாலை 798 பேருக்குத் தொழில் வாய்ப்பளித்தது.

(ஆ) இலங்கைத் தோற்பொருட் கூட்டுத்தாபனம் :

ஆய்வுக்குரிய ஆண்டில் சப்பாத்துக்களினதும், உரி தோலினதும் வெளியீடு வீழ்ச்சியடைய, குருமத்தோலினதும் தோற்பொருட்களினதும் வெளியீடு சிறிதளவால் அதிகரித்தது. 1973இல் சப்பாத்துத் தொழிற்சாலை அதன் இயலளவில் 60 சதவீதம் வேலைசெய்து, சென்றாண்டின் கையிருப்புகளையும் எடுப்பனவு செய்தும் உள்நாட்டுக்கேள்வியை மட்டுமே பூர்த்திசெய்ய முடிந்தது. கூட்டுத்தாபனம் அதன் ஏற்றுமதி வர்த்தகத்தை மீண்டும் தொடங்கி, அதன் சப்பாத்து, குரும, தோற்பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதியிலிருந்து ரூ. 20 இலட்சம்கொண்ட வெளிநாட்டுச் செலாவணியை உழைத்தது.

1973இல் விற்பனவுகளிலிருந்து பெற்ற வரவுகள் சப்பாத்துக்களினதும். தோலினதும் விலைகளின் அதிகரிப்புக் காரணமாக 10 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வாண்டுக்கான இலாபம் ரூ. 7 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) மரமும் மரப்பொருட்களும்

(அ) இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்.

1973 ஆம் ஆண்டுக்கான தரவுகள் கிடைக்கத்தக்கனவாயில்லை.*

(ஆ) அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மரம் அரிதல், மர விற்பனை என்பவற்றையும், இயந்திர அலகுகளால் மரத்தைப் பிடுங்குதலையும் மேற்கொள்கிறது. இவ்வாண்டில் உற்பத்தியும் விற்பனையும் சென்றாண்டைவிடக் கூடுதலாகவிருந்தது. மிக உயர்ந்த விற்பனையின்போதும், இக்கூட்டுத்தாபனம் 1972இல் பெற்ற ரூ. 2 இலட்ச இலாபத்திற்கெதிராக, 1973இல் ரூ. 24 இலட்சம் நட்டத்தையடைந்தது. 1972இல் கூட்டுத்தாபனம் 1,856 க. அடி மரத்துண்டுகளை ஏற்றுமதி செய்தது. ஆனால், 1973இல் எவ்வித ஏற்றுமதியும் இருக்கவில்லை.

---

* 1973இன் உற்பத்தி விற்பனைகள் பற்றிய அடிப்படை விபரங்களை கூட்டுத்தாபனம் வைத்திருக்கவில்லை. தேயிலைக் கைத்தொழிலுக்கு தேயிலைப் பெட்டிச் சட்டங்களை வழங்கும் முதன்மை வழக்குனராக இக் கூட்டுத்தாபனம் விளங்குகிறது. தேயிலைப் பெட்டிச் சட்டங்களின் விலைகள் படிப்படியாக உயர்ந்து வருவதினால், இக்கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்தல் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாய் விளங்கும்.

**(ஈ) தாளும் தாள் உற்பத்தியும், அச்சிடுதலும் வெளியிடுதலும்**

*(அ) கிழைத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனம்.*

வாழைச்சேனையிலுள்ள புதிய தாள் மட்டைத் தொழிற்சாலை தொழிற்படத் தொடங்கியதுயதுடன், கூட்டுத்தாபனம் தற்போது 22,500 தொன் தாள், தாள்மட்டைகளை உற்பத்தி செய்யும் இயலளவுடையதாயுள்ளது. 1973 இல் தாள், தாள்மட்டை என்பனவற்றில் உண்மையான உற்பத்தி 19,337 தொன்களாக அமைந்து இயலளவில் 86 சதவீதப் பயன்பாட்டைப் பிரதிபலிக்கிறது. இது சென்றாண்டினைவிட 25 சதவீதம் கூடியதாகும். தற்காலிக எண்தொகைகளின்படி, இறக்குமதி விலைகளின் அதிகரிப்பினாலும், மிக உயர்ந்த கூலிச் செலவாலும் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் வீழ்ச்சியடைந்தன. 1973 ஆம் ஆண்டிற்கான நிதிக்கணக்குகள் இன்னும் முடிவுபெறவில்லை.

*(ஆ) அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.*

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 1970ஆம் ஆண்டு முடிவில் அதன் உற்பத்தியைத் தொடங்கியது. 1972இன் வெளியீடு 1971இன் ரூ. 19 இலட்சத்திற்கெதிராக ரூ. 34 இலட்சமாக அமைந்தது. 1973இற்கான தரவுகள் கிடைக்கத்தக்கவையாய் இல்லை.

**(உ) இரசாயன, பெற்றோலிய, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள்**

*(அ) பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்.*

1973 இல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய உற்பத்திகளான எரிசோடா, குளோரின் திரவம் என்பன சென்றாண்டைவிட அதிகரிப்பைப் பதிவு செய்ய ஏனைய உற்பத்திப் பொருட்கள் வீழ்ச்சியைக்காட்டியுள்ளன. அதேவேளை எரிசோடா குளோரின் திரவம் என்பவற்றின் தொடர்பான விற்பனைகளிலும் அதிகரிப்புக்காட்டப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் (வரிக்கு முந்திய) இலாபம் சென்றாண்டின் ரூ. 4 இலட்சத்திற்கெதிராக, ரூ. 7 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

*(ஆ) இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம்.*

1973இல் இயந்திரங்கள் பழுதடைந்தமை காரணமாக பாரவண்டி, கார் என்பவற்றின் ரயர்களின் உற்பத்தி தடைப்பட்டு உள்நாட்டுச் சந்தையில் குறிப்பிடத்தக்க தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. எனினும், உணவு உற்பத்திப் பெருக்கம் காரணமாக 'வேளாண்மை' ரயர்களுக்கான கேள்வி அதிகரித்ததால் இந்த ரயர்களின் உற்பத்தி அதிகரித்தது.

இக்கூட்டுத்தாபனம் ஆண்டுக்கு 250,000 ரயர்களையும், 250,000 ரியூப்புகளையும் உற்பத்தி செய்யும் இயலளவு கொண்டது. வர்த்தக உற்பத்தி 1967இல் தொடங்கியதிலிருந்து இயலளவுப் பயன்பாடு நிலையற்றதாக இருந்து வந்துள்ளது. ரயர்களைப் பொறுத்தவரை, முதலாம் வருடத்தில் இயலளவுப்

பயன்பாடு 23 சதவீதமாகவிருந்தது. இது படிப்படியாக 1969/70இல் 28 சத வீதம்வரை அதிகரித்து 1970/71இல் சடுதியான உச்சமாகிய 60 சதவீதத்தை அடைந்து, 1971இல் 63 சதவீதமாகக் காணப்பட்டது. அதன்பின் உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைந்து, 1973இல் 60 சதவீதமாக அமைந்தது. ரியூப் புகளைப் பொறுத்தவரை, தளம்பல்நிலை அதிகமாகத் தென்படுகிறது. முத லாம் வருடத்தில் ஆரம்ப உற்பத்தியானது, இயலளவில் 40 சதவீதமாக விருந்து, 1969/70இல் 25 சதவீதமாக வீழ்ச்சியடைந்து, 1970/71இல் உச்ச நிலையான 85 சதவீதத்தையடைந்து, 1973இல் குறிப்பிடத்தக்க அளவில் மிகக் குறைந்த பயன்பாட்டு வீதமான 33 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கூட்டுத்தாபனம், நிறுவப்பட்ட இயலளவைப் பயன்படுத்த முடியாமைக்கு மூன்று முக்கிய காரணங்களைத் தந்துள்ளது. அவையாவன, ரயர்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய அச்சுக்களுக்கான தட்டுப்பாடு, இயந் திரங்களின் தட்டுப்பாடு (சிறப்பாக ஒற்றோபர் மாதத்தில் ஏற்பட்ட பேரள விலான பழுதடைவு), ரயர்களையும் ரியூப்புகளையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இறக்குமதி மூலப்பொருட்களான தட்டுப்பாடு என்பனவாகும். கூட்டுத்தாபனம் உள்நாட்டுச் சந்தைக்குத் தேவைப்படும் அளவைவிட மிகக் கூடிய அளவான நிறுவப்பட்ட இயலளவுடையதாக விளங்குகிறது. எனவே, ஆகக்கூடிய இயலளவுக்கு உற்பத்தி அதிகரித்தால், அதன் பெருமளவான உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்றுமதிச் சந்தைகளை நாடவேண்டியிருக்கும்.

'வேளாண்மை' ரயர்களின் விற்பனவுகள் அதிகரித்தபோதும், விற்பனவின் மொத்தப்பெறுமதி வீழ்ச்சியடைந்தது. கூட்டுத்தாபனம் இவ்வாண்டில், ரயர் கள், ரியூப்புகள், திண்வார்த்தொங்கல் என்பனவற்றை ஏற்றுமதிசெய்து, வெளி நாட்டுச் செலாவணியாக ரூ. 4 இலட்சத்தை உழைத்தது. இதுவும் இயலளவு குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையும் சேர்ந்து சந்தையில் ரயர்களுக்குக் குறிப்பிடத்தக்க தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. இது சிறப்பாகக் கூட்டுத் தாபனத்தின் முக்கிய நுகர்வோரான இலங்கை போக்குவரத்துச் சபையினால், அதன் ரயர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்ய வேண்டியிருந்ததிலிருந்து உணரப்படுகிறது. கூட்டுத்தாபனம் திசெம்பர் மாதத்தில் அதன் உற்பத்திப் பொருட்கள் யாவற்றினதும் விலையை உயர்த்தியது. இது இறக்குமதி மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்த தாலும், இவை தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட பொருட்களில் 75 சதவீதமாக அமைந்ததாலும் ஏற்பட்டதாகும்.

1973இன் (வரிக்கு முந்திய) இலாபம் சென்றாண்டின் ரூ. 99 இலட்சத் திற்கு மாறாக ரூ. 44 இலட்சமாகவிருந்தது.

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை.

1973ஆம் ஆண்டு, எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையில் உற்பத்தியின் மொத்த அளவு சென்ற ஆண்டின் அதேயளவில் இருந்தது. உயர்ரக பெற் றோலின் உற்பத்தி சென்ற ஆண்டிலும் பார்க்கக் கணிசமானளவு குறைவுற்றி

ருக்கையில், இரசாயனத் திரவத்தின் உற்பத்தி 1972இல் 1,07,000 தொன்களிலிருந்து 1973இல் 28,000 தொன்களாக அதிகரித்தது. மசகு எண்ணெயின் அதிக இறக்குமதி விலைகள் காரணமாக உற்பத்திப் பெறுமதி ரூ. 315 இலட்சத்தால் அல்லது 12.8 சத வீதத்தால் அதிகரித்தது. மசகு எண்ணெயின் சராசரி கொ. கா. க. விலை 1972இல் தொன் ஒன்று ரூ. 91 இலிருந்து 1973இல் தொன் ஒன்று ரூ. 146 ஆக அல்லது 60 சதவீதத்தால் அதிகரித்தது. 1973இல் இக்கூட்டுத்தாபனம் தூய்மையாக்கும் ஆலையின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிசெய்து ரூ. 1.344 இலட்சங்கொண்ட வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றது.

இத்தூய்மையாக்கும் ஆலை 1972இல் ஈட்டிய ரூ. 331 இலட்சங்கொண்ட இலாபத்திற்கு மாறாக 1973இல் ரூ. 549 இலட்சங்கொண்ட மதிப்பிடப்பட்ட நட்டத்தை எய்தியது. வருமானங்களில் ஏற்பட்ட ரூ. 880 இலட்சங்கொண்ட இப்பெருமளவு வீழ்ச்சிக்கு தூய்மையாக்கும் ஆலை உபயோகித்த விலை முறைகளே காரணமாகும். இலாபங்களைக் கணிப்பதற்காக, சில பொருட்களைஇறக்குமதி செய்தபோது, இப்பொருட்களை அக்காலம் நிலவிய அதே இறக்குமதி விலைகளில் கணித்தமையாலும், சில நிறைவுபெற்ற பொருட்களின் விலைகளில் பொதுவான அதிகரிப்பு ஏற்பட்டபோதும் முன்பு 1973இன் முற்பகுதியில் நிலவிய விலைகளில் கணித்தமையாலும் இந்நட்டம் ஏற்பட்டது. பொதுவாகக் கணிக்கும் தேவைகளுக்கு இவ்விலைமுறை திருப்தியற்றது. இக்கூட்டுத்தாபனம் இதன் வருமானங்களை நடைமுறைக்கொவ்வாத, தொடர்பற்ற எடுகோள் அடிப்படையில் குறிப்பதைவிட்டு, அந்நேரத்தில் நிலவும் உண்மை விலைகளில் கணிப்பதற்கு முயலவேண்டும்.

உராய்வு எண்ணெய் கலக்கும் பொறி

இப்பொறியில் மூல எண்ணெய்களும், பிற சேர்க்கைகளும் பல்வேறு தரமான உராய்வு எண்ணெய்களாகக் கலக்கப்படுகின்றன. 1973இன் உற்பத்தி சென்ற ஆண்டிலும்பார்க்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது. விற்பனவுகளும் அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இவ்வாண்டிற்கான இலாபம் ரூ, 26 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்.

இக்கூட்டுத்தாபனம் 150—200 வகையான வெவ்வேறு மருந்துகளையும், மருந்து வகைகளையும் தயாரிக்கின்றது. 1973இல் இக்கூட்டுத்தாபனம் உற்பத்திக்காகப் பயன்படுத்திய மூலதனம் ரூ. 54 இலட்சமாகும். உற்பத்திப் பெறுமதி சென்ற ஆண்டின் ரூ. 32 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1973இல் ரூ. 37 இலட்சமாக விளங்கியது. மீளாய்வு செய்யப்படும் ஆண்டுக் கணக்குகள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை.

(உ) அரசாங்க உரத் தயாரிப்புக் கூட்டுத்தாபனம்

உரத் தொழிற்சாலை அமைப்பதற்காக இக்கூட்டுத்தாபனம் 1966இல் நிறுவப்பட்டது. அது இன்னும் உற்பத்தியைத் தொடங்காதபடியால் தரவுகள் கிடைக்கத்தக்கவையாயில்லை.

**(ஊ) உலோக சார்பற்ற கனிப்பொருட்கள் (பெற்ரோலிய உற்பத்திகள் தவிர)**

(அ) இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்

1973இல் இக் கூட்டுத்தாபனத்தின் கயோலின் தவிர்ந்த வெளியீடுகள் சென்ருண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. எனினும், நீர்கொழும்பு தொழிற்சாலையிலுள்ள மட்பாண்டத் தொகுதி, பிலியந்தலைத் தொழிற்சாலையிலுள்ள மட்பாண்டத் தொகுதி, நலத்துறைப் பொருட்கள் என்பன மிக உயர்ந்த இயலளவில் வேலைசெய்தன. உற்பத்திப் பெறுமதியிலும் விற்பனவு வருவாயிலும் சிறிதளவு அதிகரிப்புப் பதிவுசெய்யப்பட்டது. இவ்வாண்டில் செய்யப்பட்ட விலைகளின் மீளாய்வு காரணமாக, கூடடுத்தாபனம் அதிகரித்த இலாபமாகிய ரூ. 70 இலட்சத்தைப் பெற்றது. இது முடக்கப்பட்ட மூலதனத்தில் 16.5 சத வீத வருவாயைப் பிரதிபலிக்கிறது. கூட்டுத்தாபனம் திரட்டிய நிதிக்கு 1973இல் ரூ. 15 இலட்சத்தை வழங்கியது.

(ஆ) இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்.

சீமெந்தில் மொத்த உற்பத்தி 1972இல் 377,000 தொன்களிலிருந்து 1973இல் 415,090 தொன்களாக அதிகரித்தது. ஒரு தொன் சீமெந்தின் உற்பத்திச்செலவு காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் ரூ. 240இலிருந்து, காலியிலுள்ள இறுதியாக அரைக்கும் பொறியில் ரூ. 260இற்கிடையில் வேறுபட்டது. 1973இல் இயலளவைப் பயன்படுத்தியமை சராசரியளவில் குறைவுற்றிருந்தது. இதற்கு ஆண்டு இறுதியில் சாதகமற்ற வானிலைகள் காரணமாக புத்தளம் தொழிற்சாலையில் உற்பத்தி குறைவுற்றமையே முக்கிய காரணமாகும். கிடங்குகளை வெள்ளம் மூடியதன்நிமித்தம் இவ்வற்றிலிருந்தே மூலப்பொருட்கள் பெற வேண்டியிருந்தமையால் புத்தளத்தில் சுண்ணும்பும் களிமண்ணும் எடுத்தல் தடைப்பட்டது.

இலாபம் சென்ருண்டின் ரூ. 179 இலட்சத்திற்குமாருக 1973இல் ரூ. 150 இலட்சமென மதிப்பிடப்பட்டது.

(இ) தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்.

இக்கூட்டுத்தாபனம் 1972 ஒற்ரோபர் 1ஆந் திகதி தொடக்கம் மூடப்பட்டது. இது சிறுகைத்தொழில்களை ஒன்றுசேர்ப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் 1958இல் நிறுவப்பட்டது. இக்கைத்தொழில்களிற் சில தம்முள் எவ்வித தொடர்புடையதாகவும் விளங்கவில்லை இக்கூட்டுத்தாபனத்தின் மூன்று முக்கிய தொழிற்பாடுகள் தச்சு வேலைத்தலங்களையும், செங்கல் ஓட்டுத் தொழிசாலைகளையும், ஆயுள்வேத மருந்துத் தொழிற்சாலைகளையும் நிறுவியமையாகும். ஆரம்பத்திலிருந்தே இக்கூட்டுத்தாபனம் உருப்படக்கூடிய நிலையிலுள்ளதா என்று ஐயுறும் நிலையிலிருந்தது. ஓராண்டிற்காவது இது இலாபத்தைக் காட்டும் நிலையில் இல்லாதிருந்தது. இது தொழிற்படத் தொடங்கிய ஒவ்வொரு ஆண்டும் இதன் தேறிய சராசரி நட்டம் ஏறக்குறைய ரூ. 10 இலட்சமாகவிருக்கையில், முழுக் காலப்பகுதிக்கான மொத்தத் தேறிய நட்டம் ரூ. 150 இலட்சத்திற்கு மேலாகவிருந்தது. 1969இல் இக்கூட்டுத்தாபனம்

இலாபமீட்ட முடியாத மருந்துகள் தயாரிக்கும் பகுதியைப் புதிய கூட்டுத் தாபனத்திற்கு ஒப்படைத்தபோதும், ஓட்டுத் தொழிற்சாலைகள், தச்சு வேலைத் தளம் ஆகிய இரு முக்கிய தொழிற்பாடுகள் தொடர்பாக பொருளாதாரத் தில் பயன்தரும் முறையில் இயங்கத் தவறியது. இக்கூட்டுத்தாபனம் தொழில் மூடியபோது இதனின் செங்கட்டி ஓட்டுத் தொழிற்சாலைகள் 1972 ஒற்றோபர் 1இல் மட்பாண்டத் தொழிற்சாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்க, தச்சு வேலைத் தலங்கள் 1972 நவெம்பர் 1இல் இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத் திற்கு ஒப்படைக்கப்பட்டன.

(ஈ) இலங்கைக் கனிப்பொருள், மணற் கூட்டுத்தாபனம்.

1973இல் இக்கூட்டுத்தாபனம் இல்மனைற் உற்பத்தியில் பெருமளவு அதி கரிப்பைக் காட்டியது. உற்பத்தி சென்ற ஆண்டிலும் பார்க்க 13 சதவீதத் தால் அதிகரித்தது. 'ருட்டைல்' உற்பத்தி சிறு அதிகரிப்பை மட்டுமே காட்டி யிருக்கையில். தூய்மையாக்கப்பட்ட களிமக்கல் உற்பத்தி செய்யப்படவில்லை. 'ருட்டைல்' உற்பத்திக்குக் குறைந்த தர கனிப்பொருள் மணலை உபயோகித் தமையும், களிமக்கல் உற்பத்திக்கு தண்ணீரின்மையும் காரணங்களாகும் 'ருட்டைல்' களிமக்கல் ஏற்றுமதிகளில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும். 1973இல் இல்மனைற் அதிக விலைகளில் விற்கக்கூடியமையாயிருந்தமையால் இக்கூட்டுத் தாபனத்தின் ஏற்றுமதி வருமானங்கள் ரூ. 10 இலட்சத்தால் அல்லது 10 சத வீதத்தால் அதிகரித்தன. உலகச்சந்தையில் 'ருட்டைல்' இன் விலை 1972இல் தொன்னொன்று 60 பவுனிலிருந்து 1973இல் 50 பவுணுகக் குறைவுற்றதன் காரணமாக, கேள்வியில் வீழ்ச்சி ஏற்படாதுவிடின் ஏற்றுமதி வருமானங்கள் இன்னும் அதிகமானதாகவிருக்கும்.

இக்கூட்டுத்தாபனம் சென்ற ஆண்டின் ரூ. 31 இலட்சம் கொண்ட இலா பத்துடன் ஒப்பிடுகையில் 1973இல் வரி மதிப்பிற்கு முன் ரூ. 37 இலட்சம் கொண்ட இலாபத்தைப் பெற்றது. பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் விளைவு 13.8 சதவீதமாகும்.

(உ) அரசாங்கக் காரீயக் கூட்டுத்தாபனம்.

போகலச் சுரங்கங்களுடன் கொலென்கே, ககட்டகக ஆகிய இரு முக்கிய காரீயச் சுரங்கங்கள் இக்கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பின்கீழ் கொண்டுவரப் பட்டன.

உற்பத்தி 1972இல் 7,028 தொன்களிலிருந்து 1973இல் 7,679 தொன் களாக அதிகரித்தது. சம்பாதித்த வெளிநாட்டுச் செலாவணி 1973இல் 21 சதவீதத்தால் ரூ. 118 இலட்சத்திற்கு உயர்வுற்றது. 1973இல் வரிமதிப் பிற்கு முன் இலாபம் ரூ. 57 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ஊ) அடிப்படை உலோகக் கைத்தொழில்கள்**

(அ) இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்

1973இல் சுருட்டிய கம்பி, கம்பி உற்பத்திகள் ஆகியவற்றின் உற்பத்தி, முறையே 26 சதவீதத்தாலும், 37 சதவீதத்தாலும் குறைவுற்றிருக்கையில், விற்பனவுகளும் அதேயளவு வீழ்ச்சியைக் காட்டின. இதன் விளைவாகப் பயன்பாட்டுத் திறனைப் பயன்படுத்தியமை சுருட்டிய கம்பிக்கும், கம்பி உற்பத்திகளுக்கும் மேலும் முறையே 30 சதவீதத்திற்கும், 39 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றன.

1973 இல் காரீயம். கலப்பு உருக்கு ஆகியவற்றின் தயாரிப்பிற்காக உருக்கு ஆலை ஒன்று 75 தொன் உற்பத்தி பெறவேண்டுமென எதிர்பார்த்து ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதற் தொழிலாண்டில் இவ்வுற்பத்தி 44 தொன்களாக விளங்கியது.

இக்கூட்டுத்தாபனம் 1973இல் ஏற்றுமதிகளிலிருந்து ரூ. 32 இலட்சத்தை (வெ. செ. உ. உட்பட)ப் பெற்றது. கூடிய விற்பனவுகளில் இக்கூட்டுத்தாபனம் மதிப்பிடப்பட்ட ரூ. 135 இலட்சம்கொண்ட அதிகரித்த இலாபத்தைப் பெற்றது. இதற்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விலை உயர்வைத் தொடர்ந்து ஏற்பட்ட விலைஅதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும்.

**(எ) தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், எந்திரமும் இணைப்புக்களும்**

(அ) இலங்கை அரச வன்கலக் கூட்டுத்தாபனம்

1973 இல் யக்கலையிலுள்ள தொழிற்சாலையின் உற்பத்திகளில் பொதுப்படையான அதிகரிப்புக் காணப்பட்டது. அதேவேளையில் உருக்குத் தொழிற்சாலையின் உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1973 இல் வெளியீட்டின் பெறுமதி கணிசமான அளவு அதிகரித்தது. மண்வெட்டி, மற்றும் ஏனைய விவசாய உபகரணங்களின் விற்பனவு அதிகரித்தது. கூட்டுத்தாபனம் 500 தொன் உருக்கு உற்பத்திகளை விற்பனவு செய்து ரூ. 2 இலட்சத்ததை வெளிநாட்டுச் செலாவணியாகப் பெற்றது. அதன் உற்பத்திப்பொருட்களில் பெரும்பாலானவற்றின் விலை அதிகரித்தபோதும் கூட்டுத்தர்பனம் அதன் உற்பத்திச்செலவு காரணமாக 1973 இல் ரூ. 31 இலட்சம் நட்டமடையுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**4. ஏனைய பொது முயற்சிகள்**

**(அ) விவசாயம், காட்டுத்தொழில், கடற்றொழில்**

**(அ) இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம்**

1973இற்கான தரவுகள் கிடைக்கத்தக்கனவாயில்லை.

## (ஆ) அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றம் சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1973இல் அதிகரித்தது. இவ்வாண்டில் கூட்டுத்தாபனம் 29 பெருந்தோட்டங்களையும், 4 தொழிற்சாலைகளையும் தனது முகாமைக்குட்படுத்தியது. பெருந்தோட்டத் தொழிற்பாடுகளிலிருந்து பெற்ற வருமானம் 1972 இல் ரூ. 228 இலட்சத்திலிருந்து 1973 இல் ரூ. 283 இலட்சமாக அதிகரித்தது. இக்கூட்டுத்தாபனம் பெருந்தோட்டங்களிலிருந்து இதன் இலாபங்களை அதிகரித்திருக்கையில், 4 தொழிற்சாலைகளிலிருந்தும் சென்ற ஆண்டு நட்டத்தையெய்தியமைக்கு மாறாகச் சிறிதளவு இலாபம் ஏற்பட்டது. பெருந்தோட்டங்களையும், தொழிற்சாலைகளையும் ஒருமித்து நோக்கும்போது இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபங்கள் 1972 டிசெம்பரில் முடிவடைந்த 15 மாதகாலப் பகுதிக்கான ரூ. 13 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 24 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஈ) 9

### அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (அ)

| விடயங்கள் | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 | 1973* |
|---|---|---|---|---|---|
| 1. முதலிடப்பட்ட மூலதனம் (ரூ '000)(ஆ) | 36,290 | 38,414 | 40,965 | 46,253 | 42,100 |
| பெருந்தோட்டங்களில் ... | 29,262 | 31,386 | 33,815 | 39,095 | 42,100 |
| தொழிற்சாலையில் ... | 7,028 | 7,028 | 7,150 | 7,158 | — |
| 2. பெருந்தோட்டங்களில் | | | | | |
| எண்ணிக்கை ... | 15 | 13 | 13 | 23 | 29 |
| ஏக்கர்கள் ... | 14,250 | 13,015 | 12,827 | 32,887 | 39,235 |
| பயிரிடப்பட்ட ஏக்கர்கள் ... | 9,699 | 9,691 | 9,814 | 22,853 | 27,250 |
| வருவாய் (ரூ. '000) ... | 4,740 | 4,403 | 5,936 | 22,815 | 28,307 |
| இலாபம்(+) அல்லது(இ) நட்டம்(—) (ரூ. '000) (இ)... | + 12 | + 30 | + 448 | + 1,785 | + 2,262 |
| தொழில்நிலை (எண்ணிக்கை) ... | 7,389 | 6,202 | 6,775 | 19,146 | 21,076 |
| 3. தொழிற்சாலைகள் ... | | | | | |
| எண்ணிக்கை | 4 | 4 | 4 | 4 | 4 |
| வருவாய் (ரூ. '000) .. | 4,175 | 3,081 | 3,802 | 4,284 | 3,921 |
| இலாபம்(+) அல்லது நட்டம்(—) ... (ரூ. '000)(இ)... | — 109 | — 145 | + 29 | — 513 | + 136 |
| தொழில்நிலை (எண்ணிக்கை) ... | 351 | 298 | 226 | 290 | 290 |
| 4. மொத்தம் | | | | | |
| (வருவாய் ரூ '000) ... | 8,951 | 7,484 | 9,738 | 27,099 | 32,228 |
| இலாபம்(+) அல்லது நட்டம்(—) ... (ரூ. '000)(இ)... | + 11† | — 115† | + 477 | + 1,272 | + 2,398 |
| தொழில்நிலை (எண்ணிக்கை) ... | 7,740 | 6,500 | 7,001 | 19,436 | 21,366 |

மூலம்: அரசாங்க பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம்

(அ) எண்தொகைகள் ஒற்றோபர் – செத்தெம்பர் வரையிலான கணக்காண்டுக்குரியவை; ஆனால் 1971/72 ஆம் ஆண்டிற்குரிய எண்தொகைகள் 1972 திசெம்பரில் முடிவடையும் 15 மாத காலப் பகுதிக்குரியவையாகும். 1973 ஆம் ஆண்டு எண்தொகைகள் கலண்டர் ஆண்டுச்குரியவை.

(ஆ) கணக்காண்டு முடிவில் உள்ளபடியான மொத்தத் தொகை

(இ) வரிவிதிப்பதற்கு முந்திய இலாபம்

† கணக்காய்வு அதிபதியின் அறிக்கையின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட எண்தொகைகள்

* மதிப்பிடப்பட்ட எண் தொகைகள்.

காணிச் சீர்திருத்தக் குழு, காணிச்சீர்திருத்தங்களுக்குள் உட்பட்ட கூடிய உற்பத்தி ஆற்றல் வாய்ந்த பெருந்தோட்டங்களை இக்கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கும் கொள்கையை மேற்கொண்டது, இம்மேலதிகப் பொறுப்புடன் இக்கூட்டுத்தாபனத்தின் நோக்கிலும் தொழிற்பாடுகளிலும் கணிசமானளவு அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

**(ஆ) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித்தொடர்புகள்**

*(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபை*

சென்ற ஐந்து நிதியாண்டுகளிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தொழிற்பாடுகளினது சில முக்கிய அம்சங்களை அட்டவணை 11 (ஈ) 10 தருகின்றது.

1973ஆம் ஆண்டு இச்சபை ரூ. 370 இலட்சம்கொண்ட தொகையை மேலதிமாக முதலீடு செய்ததனுல் இதன் வாகன எண்ணிக்கை 1972இல் 6,300 இலிருந்து 1973இல் 6,637 ஆக அதிகரித்தது. ஆயினும் வாகனங்கள் அடிக்கடி பழுதடைந்தமையால் கிடைக்கத்தக்க பாவனையிலுள்ள எண்ணிக்கை இவ்வாண்டின்போது வீழ்ச்சியுற்றது. இது கிடைக்கத்தக்க பாவனையிலுள்ள பேருந்திகளின் எண்ணிக்கைக்கும் திருப்திகரமான சேவையை அளிப்பதற்கும் இடையிலுள்ள இடைவெளியை அதிகரித்தது.

இச்சபையினுல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி திட்டமிடப்பட்ட மைல்கள் ஏறக்குறைய 200 இலட்சம் மைல்களால் குறைவுற்றிருக்கையில், பேருந்தி பழுதடைந்தமையாலும், தேவையான நேரத்தில் பேருந்தியிற் பணி புரிவோர் கிடைக்காதமையாலும் ஓடிய மைல்களின் இழப்பு 1972இல் 500 இலட்சம் மைல்களிலிருந்து 1973இல் 680 இலட்சம் மைல்களாக அதிகரித்தது. இதேவேளையில் பேருந்தி தங்குமிடத்திலிருந்து பயணங்கள் ஆரம்பிக்கின்ற இடங்கள் ஆகியவற்றுக்கு வெறுமனே ஓடிய மைல்கள் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. பயணம் பண்ணிய ஆட்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து 1973இல் 14,130 இலட்சத்திற்கு உயர்வுற்றது. வாகனப் பாவிப்பின் சராசரி எண்ணிக்கை நாளொன்றுக்கு 171 மைல்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

செலவில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பு வருமானத்தின் அதிகரிப்பைக் குறைத்து சென்ருண்டின் ரூ. 100 இலட்ச நட்டத்துடன் ஒப்பிடுகையில், 1973இல் இச்சபை ரூ. 120 இலட்ச நட்டத்துடன் தொழிற்படுவதை ஏற்படுத்தியது.

வேலையாட்களின் எண்ணிக்கை ஏறக்குறைய அதே நிலையிலிருந்தது 1973இல் மொத்த வேலையாட்களின் எண்ணிக்கை 52,848 ஆகவிருந்தது. 1973 ஆம் ஆண்டு சராசரியாகத் தனிப்பேருந்தியிற் பணிபுரிந்த ஊழியரின் எண்ணிக்கை

## அட்டவணை II (ஈ) 10

# போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

| இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களம் 1 | 1968/69 | 1969/70 | 1971 | 1972 | 1973 |
|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ரூ. '000)2 ... | 665,679 | 687,454 | 730,336அ | 761,977ஆ | 808.545இ |
| 2. பாதை மைல்களில் ... | 1,076 | 1,080 | 1,140 | 1,140 | 1,440 |
| 3. ஊர்திகள் (எண்ணிக்கை) ... | 7,484 | 7,400 | | | |
| (அ) தொடர்வண்டி இயக்கும் பொறிகள் ... | 393 | 328 | வி.கி. | வி. கி. | வி. கி. |
| (ஆ) வண்டிகள் ... | 7,091 | 7,072 | | | |
| 4. நடைபெற்ற போக்குவரத்து ... | | | | | |
| (அ) பயணத்தர்கள் (ப. இ.) 4 ... | 85.5 | 84.62 | 1,724.0 | 85.4 | 88.1இ |
| (ஆ) பொருட்கள் (ப. இ. தொன்கள்)5 ... | 1.8 | 1.70 | 203.8 | 1.7 | 1.9 |
| 5. போக்குவரத்து மைல்கள் ... | | | | | |
| (அ) பயணத்தர் மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 1781.2 | 1825.8 | 81.8 | 1,924.0 | 12,001.0இ |
| (ஆ) பொருட்கள் மைல்கள் (ப. இ. தொன்) மைல்கள் ... | 220.0 | 228.3 | 1.8 | 207.4 | 201.9இ |
| 6. மொத்த வருமானம் (ஆயிரம் ரூபாய்களில்) ... | 109,681 | 117,042 | 116,279அ | 177,858ஆ | |
| (அ) பயணத்தர்கள் ... | 57,038 | 60,293 | 63,566 | 102.024 | 149,833 |
| (ஆ) பொருட்கள் ... | 43,913 | 46,337 | 48,422 | 69,333 | 89,258 |
| (இ) ஏனையவை ... | 6,504 | 10,412 | 4,291 | 6,501 | 53,043 |
| 7. மொத்தச் செலவு6 (ரூ. '000) ... | 140,679 | 144,010 | 147,010அ | 194,922ஆ | 7,532 |
| 8. இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூ. '000)7 | | | | | 167,707 |
| (அ) தொழிற்படுகையில் ... | —30,988 | - 27,022 | - 30,731 | -17,064 | - 17,874 |
| (ஆ) முழுமையாக ... | —57,438 | - 55,122 | -61,907ஈ | -61,694 | - 56,614 |
| 9. தொழில் நிலை | | | | | |
| (அ) தொழிலிலமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை8 | 23,826 | 25,388 | வி.கி. | 25,858 | 26,320 |
| (ஆ) மொத்தக் கூலிச் செலவு (ரூ. '000)9 | 98,576 | 105,201 | | 107,676 | 188,713 |

| இலங்கைப் போக்குவரத்துச் சபை 1 | 1969/70 | 1971 | 1972* | 1973* |
|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம்2 (ரூ.' 000) ... | 320,392 | 376,494 | 454,121 | 506,642 |
| (அ) ஊர்திகள் ... | 251,942 | 294,364 | 345,718 | 382,812 |
| (ஆ) ஏனையவை ... | 68,450 | 82,130 | 108,403 | 123,830 |
| 2. வாகனங்களின் (எண்ணிக்கை) | | | | |
| (அ) சொந்தத்திலிருந்தவை | 5,923 | 6,404 | 6,300 | 6,637 |
| (ஆ) இயங்கும் வாகனங்களின் தொகை | 5,625 | 5,834 | 5,923 | 6,034 |
| (இ) இயங்கமுடியுமான தொகை ... | 4,524 | 5,813 | 4,301 | 4,095 |
| (ஈ) தேவையானவை | 4,724 | 4,940 | 4,979 | 4,996 |
| (உ) இயங்கிய சராசரி ... | 4,170 | 4,494 | 4,875 | 4,910 |
| 3. மைல்களின் தொகை (ப. இ. மைல்களில்) | | | | |
| (அ) அட்டவணையிடப்பட்ட ... | 269.5 | 301.2 | 311.5 | 310.3 |
| (ஆ) இயங்கிய ... | 233.8 | 241.1 | 270.0 | 250.9 |
| (இ) இழந்த ... | 42.8 | 64.3 | 50.8 | 68.0 |
| (ஈ) பாவிக்கப்படாத ... | 1.5 | 1.9 | 0.9 | 0.9 |
| 4. பயன்படுத்தப்பட்ட திறன் | | | | |
| (அ) மொத்த ஆசன மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 12,333.7 | 12,625.8 | 14,346.0 | 13,391.0 |
| (ஆ) கொண்டு செல்லப்பட்ட மொத்தப் பயணத்தர்கள் (ப. இ. எண்) ... | 1,357.7 | 1,335.8 | 1,390.4 | 1,413.0 |
| (இ) மொத்தப் பயணத்தர் மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 7,394.4 | 7,419.1 | 8,697.9 | 9,213.2 |
| (ஈ) பார அம்சம் (%) .. | 60.0 | 58.8 | 60.6 | 68.8 |
| (உ) பயன்படுத்தப்பட்ட சராசரி வாகனங்கள் | — | | | |
| (ஒரு நாளுக்கு மைல்கள்) .. | 154 | 147 | 171 | 171 |
| 5. வருமானம் (ரூ. '000) | 287,916 | வி. கி. | 402,072 | 430,902 |
| (அ) பயணத்தர் கட்டணம் ... | 280,143 | வி. கி. | 398,352 | 424,426 |
| (ஆ) ஏனையவை ... | 7,773 | வி. கி. | 3,720 | 6,476 |
| 6. செலவு10 (ரூ. '000) ... | 322,100 | 366,743 | 412,277 | 442,921 |
| 7. சம்பளச் செலவு (ரூ. '000) ... | 180,300 | 203,991 | 231596, | 236,388 |
| 8. தொழில் நிலை (எண்தொகை)8 ... | 40,832 | 48,140 | 53,989 | 52,848 |
| 9. இலாபம் (+) அல்லது (—) நட்டம் எ (ரூ. '000)7 ... | -34,187[13] | - 56,707 | - 10,205 | - 12,019 |

| இலங்கை விமானச் சேவை1 | 1968/69 | 1969/70 | 1971 | 1972 | 1973 |
|---|---|---|---|---|---|
| 1. சொத்துக்களின் பெறுமதி2 (ரூ. '000) ... | 22,149 | 80,304 | 140,304 | வி. கி. | வி. கி. |
| 2. கொண்டு செல்லப்பட்ட பயணத்தர்களும் பொருட்களும் | | | | | |
| (அ) பயணத்தர்கள் (எண்ணிக்கை) ... | 78,666 | 98,351 | 119,479 | வி. கி. | வி. கி. |
| (ஆ) பொருட்கள் (தொன்கள்) ... | 523 | 576 | 630 | வி. கி. | வி. கி. |
| 3. பயணத்தர் மைல்களும் தொன் மைல்களும் | | | | | |
| (அ) பயணத்தர் மைல்கள் (ரூ. '000) ... | 59,619 | 69,545 | 69,710 | வி. கி. | 217,946 |
| (ஆ) பொருட்கள் தொன் மைல்கள் (ரூ. '000) ... | 1,883 | 1,779 | 1,620 | வி. கி. | வி. கி. |
| 4. பயன்படுத்தப்பட்ட திறன் (பார அம்சம்%) | | | | | |
| (அ) உள்நாட்டுச் சேவைகள் ... | 67.1 | 59.6 | 53.5 | வி. கி. | வி. கி. |
| (ஆ) பிரதேச சேவைகள் ... | 43.1 | 31.8 | 33.0 | வி. கி. | வி. கி. |
| (இ) பன்னாட்டுச் சேவைகள் ... | | | | | |
| 5. மொத்த வருமானம் (ரூ. '000) ... | 3,274 | 17,546 | 19,097 | 52,389 | 55,132 |
| 6. மொத்தச் செலவு (ரூ. '000) ... | 1,279 | 18,237 | 55,549 | 42,019 | 36,298 |
| 7. இலாபம் (+) அல்லது (—) நட்டம் (ரூ. '000) 7 ... | + +,995 | — 691 | + 2,078 | + 3,517 | + 8,028 |
| 8. தொழில் நிலை (எண்ணிக்கை)8 .. | 609 | 681 | 716 | 806 | வி. கி. |

* மதிப்பீடு.

தொடரும்

## அட்டவணை II (ஈ) 10

## போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

| இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் | 1968/69 | 1969/70 | 1971 | 1972* | 1973 |
|---|---|---|---|---|---|
| 1. அரசாங்கத்திஞல் வழங்கப்பட்ட மூலதனம் (ரூ.'000) | — | — | 8,160 | 8,500 | 10,900 |
